MAY 2025 **U/ID 30617/UCL1A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்திற்கு 30 சொற்களில் விடையெழுதுக.

1. ஆக்கல், அழித்தல், மாற்றுதல் எல்லாம் கடவுள் செயல் என்பதை அறிந்தவர் யார்?

2. பாரதியார், கண்ணனை எத்தனை உறவுகளாகத் தம் கவிதைகளில் படைக்கிறார்?

3. செங்கீரைப் பருவம் என்றால் என்ன?

4. பாரதி காலத்தில் ஆண்டான் மற்றும் அடிமைகளாக இருந்தது யார் யார்?

5. ரா.பி. சேதுப்பிள்ளையின் பெற்றோர்கள் யாவர்?

6. மு.வரதராசனார் துணைவேந்தராக இருந்த பல்கலைக்கழகம் எது?

7. ஔவை நாடகத்தின் பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.

8. ஔவை நாடகத்தில் ஔவையை வாழ்த்திய வள்ளல்கள் யார் யார்?

9. சிறுகாப்பியம் என்றால் என்ன?

10. தமிழின் முதல் நாவல் எது? அது யாரால் எழுதப்பட்டது?

11. பொன்னகரம் சிறுகதை வழியாக அறியப்படும் பழமொழி எது?

12. உபதேசம் சிறுகதையின் மையக் கதாப்பாத்திரத்தின் பெயரை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்திற்கு முறையே 200 சொற்களில் விடையெழுதுக.

13. கண்ணன் என் சேவகன் – எவ்வாறு ? விளக்குக

14. கண்ணன் என் அரசனாக இருப்பது எங்ஙனம்?

15. கோவூர் கிழாரின் அருள் உணர்வு எத்தகையது? விளக்குக.

16. நாஞ்சில் வள்ளுவனின் கொடைத் திறத்தை ஔவை நாடகம் வழி எடுத்துரைக்க.

17. பிறகு நாவல் எங்ஙனம் தொடங்குகிறது?

18. பால்வண்ணம் பிள்ளை சிறுகதையின் பெயர்ப் பொருத்தம் மற்றும் கதை உத்தியை விளக்குக.

19. கருச்சிதைவு கதையின் அமைப்பைச் சுருக்கி உரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றிற்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. தென்றலின் சிறப்புகளாகப் பாரதிதாசன் அழகின் சிரிப்பில் கூறுவனவற்றை விவரி

21. திருக்குற்றாலம் எனும் தலைப்பில் ரா.பி. சேதுப்பிள்ளை மொழிவனவற்றை எழுதுக.

22. ஔவை நாடகத்தின் காட்சியமைப்பு குறித்தெழுதுக.

23. பிறகு நாவலின் கதைப்பின்னலை ஆய்க.

24. வாடாமல்லிகை சிறுகதையின் வழியாக நீவிர் அறிவனவற்றை எடுத்தியம்புக.

———————